DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 99/2019**

Deposition of Witness: PW2.

| | | | |
|---|---|---|---|
| Name | திலகர் | Father Name – | முத்துவேலாயுதம் |
| Age | 70 | Village – | உப்புக்கோட்டை |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.09.2025.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. 1ம் வாதி வரதராஜ் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என்னுடைய சித்தப்பாவின் மகனாவார். வழக்கு விவரங்கள் அனைத்தும் 1ம் வாதிக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் உள்ள வழக்குச் சொத்தானது சர்கார் அரசுப்புறம்போக்கு என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து தற்போது அரசாங்கம் புறம்போக்கு என வகைப்படுத்தியுள்ளது. எந்த ஆண்டு சர்கார் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு சொந்தமான சொத்து, தவறாக புறம்போக்கு நிலம் என வகைப்படுத்தப்பட்டதை எதிர்த்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 9, வாசாஆ 10 ஆவணங்களுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்குரைச் சொத்திற்கு என் பெயரில் பட்டாவோ அல்லது வேறு வருவாய் ஆவணங்களோ உள்ளதா என்றால் நீதிமன்றம் மூலம் வாங்கிய பத்திரம்தான் உள்ளது. வருவாய் ஆவணங்கள் இல்லை. நீதிமன்றம் மூலம் வாங்கிய பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நீதிமன்றம் மூலம் வாங்கிய பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குரைச் சொத்தான சர்வே எண்.344/14 என்பது அ பதிவேடு மற்றும் அடங்கலில் சர்கார் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட வழக்குரைச் சொத்தை பொறுத்து நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2025.09.11 17:13:13 +0530

District Munsif,
Bodinayakanur.